இருமுறை 16 நாட்களுக்கு அதாவது 32 நாட்களுக்கு தண்ணீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து அணையின் நீர் இருப்பு அதிமாகும்பொழுது தொடர்ந்து பாசனத்திற்குத் தண்ணீர் வழங்குவது குறித்து ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயராமன், ஒரு கேள்வி கேளுங்கள்.

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அணையின் நீர் இருப்பு குறைவாக இருப்பதால் இரண்டு முறை ஒரு மாத காலத்திற்குத் தண்ணீர் விட முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்துக் கொடுத்து சிறு பயிர்கள், தானிய பயிர்கள் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பாசனத்தில் இன்றைய நீர் இருப்பு............. (மணியடிக்கப்பெற்றது)

2. சிறப்புக் கவன ஈர்ப்பு தொடர்ச்சி

(ஆ) விழுப்புரம் நகர்மன்றம் செயல்படாமை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் ஏதோ சொல்கிறார், கேட்டுக்கொள்ளுங்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகராட்சி மன்றம் சார்பாக இங்கே எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையில் முதலமைச்சர் அவர்கள் கடுமையான குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, குற்றச்சாட்டு இல்லை. உண்மை நிலையை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நிலைமையை அவர்கள் விளக்கி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்ன காரணத்தால் அந்தக் குற்றச்சாட்டு உண்மை அல்ல. பொய், ‍ என்று சொல்ல எனக்கு வாய்ப்பு இல்லை. அது முறையல்ல. ஆனால் பிரச்சினையை எழுப்பியவர் விளக்கம் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு அளித்தால் இவ்வளவு பெரிய குற்றச்சாட்டு சொன்னதற்குப் பின்னர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டு ஒன்றுமே சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி மன்றம் செயல்படாதது குறித்த அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

பேராசிரியர் க. அன்பழகன்: அப்படியானால் பேரவைத் தலைவர் அவர்கள் முதலமைச்சர் சொன்ன எதுவும் குற்றச்சாட்டு அல்ல என்று இந்த அவைக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நகரமன்றத் தலைவருடைய பொறுப்பற்ற தன்மையின் காரணமாக இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பேராசிரியர் க. அன்பழகன்: அது குற்றச்சாட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆகவே நகரமன்றத் தலைவருக்கு அறிவுரை சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு குற்றச்சாட்டு. குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்று கூட சொல்ல எனக்கு உரிமை இல்லை. குற்றச்சாட்டு உண்மை அல்ல என்று மறுப்பதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டாமா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசியல் ரீதியாக இங்கே பேசவில்லை. எந்தக் குற்றச்சாட்டையும் கூறவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு பிரச்சினையை எழுப்பினார். அதற்கு துறையிடமிருந்து, உரிய துறையிடமிருந்து அறிக்கை பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் தந்த தகவல்களின் அடிப்படையில் துறை தயாரித்த அறிக்கையை நான் இங்கே வாசித்தேன். இதில் நான் சொல்வதை எப்படி குற்றச்சாட்டு என்று சொல்ல முடியும்? அந்த வார்த்தையே தவறானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

2003 நவம்பர் 6]

பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை குற்றச்சாட்டு சொன்னதாகக் கூறுவது என்னுடைய கருத்து அல்ல. முதலமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையில் சொல்லப்பட்ட பல செய்திகள் மூலம் விழுப்புரம் நகராட்சி மன்றத் தலைவரும், நகராட்சி மன்ற அமைப்பும் செயல்படுவதில் குறை இருப்பதாக இங்கே அறிக்கையிலே படிக்கப்பட்டது. அது அதிகாரிகள் தந்த செய்தி. அதிலே கருத்து மாறுபாடு இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. பொன்முடி அவர்கள் சொன்னது தவறு என்று சொல்வதற்கு எப்படி உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறதோ, அதேபோல அதிகாரிகள் சொன்னது தவறு என்று சொல்ல ஒரு அவசியம் இருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் அவ்வளவு நீண்ட ஓர் அறிக்கையைப் படித்ததற்குப் பின்னர் ஒரு சிறு விளக்கம்கூட சொல்வதற்கு, பிரச்சினையை எழுப்பியவருக்கு வாய்ப்பு இல்லாமல் போவது நல்லது அல்ல. அதற்குத் தாங்கள் அனுமதி தரவில்லை என்று சொன்னால், இந்தப் பிரச்சினையை எழுப்பிய எங்களுடைய நோக்கமே, பொது நோக்கமே இதனாலே பாழ்பட்டுப் போகிறது. அந்த வருத்தத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. கவன ஈர்ப்புத் தீர்மானம், சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது அரசாங்கத்திற்கு ஒரு விவரத்தைச் சொல்லி, அரசாங்கத்தினுடைய பதிலைப் பெறுவதுதானே தவிர, அதிலே தொடர்ந்து விவாதிப்பதற்கு ஒன்றும் இடம் கிடையாது. (குறுக்கீடுகள்) விவாதத்திற்கு ஒன்றும் அதிலே இடம் கிடையாது.

பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினிடத்திலே நல்ல எண்ணத்தோடு ஒரு பிரச்சினையைக் கொண்டுவந்து அதன் மூலமாக அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கிறோம். அதற்கு நேர்மாறான ஒரு கருத்து அரசாங்கம் சார்பாக, அதிகாரிகள் சார்பாகச் சொல்லப்படுகிறபோது விளக்கம் சொல்ல வாய்ப்பு இல்லை, என்றால், சட்டமன்றத்திலே உறுபபினராக இருந்தும் பலன் இல்லாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இதைத்தான் பேரவைத் தலைவர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள் என்று சொன்னால் நாங்கள் எங்களது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஆகவே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)